**உள்ளக பரீட்சை அறிவித்தல் !**

எனது இலக்கம் PPSC/EX/2/2/1/2025
வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபைகள் அலுவலக கட்டிடத் தொகுதி,
குருணாகல்.
*2025.10.02*

பிரதான செயலாளர் (வடமேல்),
ஆளுநரின் செயலாளர் (வடமேல்),
வடமேல் மாகாணத்தின் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு,

***வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025***

வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2025 திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி 2025 .10.24 ஆந் திகதிக்காகும்.

குறிப்பு – இணையவழி ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2025.10.03 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படும் என்பதோடு, 2025.10.24 ஆந் திகதி இரவு 9.00 மணியுடன் முடிவடைகின்றது.

**கவனத்திற் கொள்ளவேண்டியது: இணையவழி ஊடாக விண்ணப்பிக்கும் நீங்கள் உள்ளடங்குவது "வடமேல் மாகாண அரச சேவைக்கு" என தெளிவாக குறிப்பிடபடல் வேண்டும்.**

02. இப்பரீட்சை பின்வரும் நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்களாக தாபிக்கப்படுகின்ற நகரங்கள மற்றும் அதற்கு உரித்தான நகர இலக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| குருணாகல் | 01 |
| புத்தளம் | 02 |

மேற்குறிப்பிட் ஏதேனும் ஒரு நிலையத்திற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகளைக் கொண்ட எண்ணிக்கையினர் விண்ணப்பிக்காதிருப்பின் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுவதோடு, அவ்விண்ணப்பதாரிகள் கிட்டிய நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றியமைக்க வாய்ப்பளிக்கப்பட மாட்டாது

03. இந்தப் பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

04. இந்த போட்டிப் பரீட்சை அல்லது இந்தப் போட்டிப் பரீட்சைக்குச் சமாந்தரமாக நடாத்தப்படுகின்ற திறன் அடிப்படையின் கீழ் வடமேல் மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை என்ற பரீட்சைகள் இரண்டில் முதலாவதாக நடாத்தப்பட்ட பரீட்சையின், பரீட்சை நடைபெற்ற இறுதித் திகதிக்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களில் 50% இனை இப்போட்டிப் பரீட்சையின் மூலம் பூர்த்தி செய்யப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியெய்வதற்காக பரீட்சைக்கு உரித்தான ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் நியமனம் செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சை விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரீட்சித்துப் பார்ப்பதற்காக மாத்திரமே அமைந்துள்ளதோடு, அதன்போது எவ்விதப் புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது.

05. 2025.03.25 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 7–2025 ஆம் சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரித்தாகும் என்பதோடு, அதற்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 71,240/ – 11x1,360 – 18X1,850 – ரூபா. 119.500 ஆகும். அச்சம்பளம் உமக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதிக்காகும். நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி முதல் உங்களுக்கு இந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இல் உள்ள ஏற்பாடுகளின் படி சம்பளம் வழங்கப்படும்.

06. **பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :–**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்களினுள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள வடமேல் மாகாண அரச சேவையில் உட்பட்டுள்ள,

(அ) வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 08 வருடங்களுக்குக் குறையாத முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் II ஆந் தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தைப் பெற்றுள்ள வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

மற்றும்

(ஈ) குறித்த திகதிக்கு உரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு:

I. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தற்போது வகிக்கும் தரத்திற்கு ஏற்ப, மேற்படி (அ), (ஆ), (இ), மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ள முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தற்போதுள்ள தரத்திற்கு உரித்தாக சித்தியெய்திருக்க வேண்டிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சையை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாண ஏற்பாடுகளுக்கு ஏற்ப பூர்த்தி செய்திருக்க வேண்டிய குறைந்தபட்ச தடவை எண்ணிக்கையினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு சித்தியெய்துள்ள ஆனால் நிர்வாகக் காரணத்தின் அடிப்படையில் குறித்த வினைத்திறன் காண் தடைப்பரீட்சை சலுகை தாமதமானதன் காரணமாக சேவையில் நிரந்தரப்படுத்தல் அல்லது பதவியுயர்வு அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இழக்கப்படுவதனால் மாத்திரம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் உள்ள உத்தியோகத்தர்களும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

II. இருப்பினும், அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு மற்றும் பரீட்சைக்கு தோற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குவது பதவியுயர்வு பெறுவதற்கான தகுதியாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன், அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்வு மேற்கொள்ளப்படுவது உரியவகையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாக மற்றும் குறித்த பதவியில் நிரந்தரப்படுத்தல்/ பதவியுயர்த்தலைப் பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்டதன் பின்னராகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :–**

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தான் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருக்கு அவரது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரி அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

II. இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் பூரணப்படுத்துதல் வேண்டும். சிங்களத்தில் அல்லது தமிழில் பூரணப்படுத்துமாறு அறிவுறுத்தல் தரப்பட்டுள்ள பகுதிகளை மாத்திரம் சரியாக அம்மொழிகளில் பூரணப்படுத்துதல் வேண்டும். இணையவழி ஊடாக விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது ஆலோசனைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

III. இணையவழி முறை ஊடாக நிவர்த்தியாக பூரணப்படுத்தி பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள அச்சிடப்பட்ட பிரதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுசீட்டினை இணைத்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தபால் கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,
மாகாண சபைகள் கட்டிடத் தொகுதி,
குருணாகல்.

க.வே. – விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

IV. பரீட்சைக் கட்டணம் ரூபா. 1,200/- ஆகும். முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. முதற் தடவையாக பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளாக கருதப்படுவது சாதாரண எழுதுநர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு நியமனம் செய்வதற்காக 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரிகளிடமிருந்து மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரசின் தட்டெழுத்தாளர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றாத விண்ணப்பதாரிகள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் அதிஉயர் தரத்தின் போட்டிப் பரீட்சையில் தோற்றாத விண்ணப்பதாரிகள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச கணக்குப் பதிவாளர் சேவையின் / அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரசின் களஞ்சிய பொறுப்பாளர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மற்றும் 2006, 2007, 2011, 2015 மற்றும் 2018 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் ஏதேனும் ஒரு பரீட்சையில் அல்லது தோற்றாத விண்ணப்பதாரிகள் மாத்திரமாகும்.

* முன்னைய பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்பி பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் ஏதேனும் அல்லது விடயத்தின் காரணமாக பரீட்சைக்கு தோற்றாத அவ்விண்ணப்பதாரிகள் இந்தப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

* முதற் தடவை பரீட்சைக்கு தோற்றுவதாக பொய் கூறி பரீட்சைக் கட்டணத்தை செலுத்தாது இப்பரீட்சைக்கு தோற்றி, அது பற்றி தெரியவந்ததன் பின்னர் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கையின் மோசமான விளைவுகளை உத்தியோகத்தரும், நிறுவனத் தலைவருமே பொறுப்பேற்றல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணத்தை செலுத்த இணையவழி முறைமை ஊடாக வழங்கப்படுகின்ற பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கட்டண செலுத்துகை முறையின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கி கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

II. எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card)

III. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறைமை மூலம் (Bank of Ceylon Online Banking Method)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

V. கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாக அல்லது மேலதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு பொறுப்பேற்காது.

VI. பரீட்சைக்கான செலுத்தப்பட்ட தொகை எந்தவித காரணத்தினாலும் மீள செலுத்தப்படவோ அல்லது மற்றொரு பரீட்சைக்காகவோ மாற்றப்பட மாட்டாது.

VII. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்திரினால் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

VIII. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பாக குறிப்பிட்டு அறிவித்தலொன்றின் மூலம் / விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை நடாத்தப்படும் என அறிவித்தல் வெளியிடப்பட்டு குறைந்தது 02 அல்லது 03 நாட்களுக்கு பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்துக் கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக முழுமைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்தோடு பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு – மேற்படி முறைமையின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் குறித்த அறிவுறுத்தல் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் உரிய தொழில்நுட்ப அறிவுறுத்தலின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

08. **பரீட்சைக்கு உள்ளடக்குதல் :-**

(அ) பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளினால் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தை முதலில் அம்மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுகின்ற நாளிலே பரீட்சை நிலைய மண்டபப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு, பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள்

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில், தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். எல்லா பரீட்சார்த்திகளும் பின்பற்றப்பட வேண்டிய சட்டத் தொடரொன்று அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு எல்லா வகையிலும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு :- ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதானது இவ்வறிவித்தலின் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு) தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என அங்கீகரிப்பதாக கருதப்பட மாட்டாது.

**09. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :–**

பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருமாறு காட்டப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் சமர்ப்பிப்பது செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை.
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திராதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் தமது இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

**10. பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை :–**

(அ) இந்தப் பரீட்சைக்கு உரித்தான விதிமுறைகளின் படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது அதற்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்ய முடியும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவரினால் வழங்கப்பட்ட தகவல் பின்னர் ஒரு காலத்தில் தவறானது எனக் கண்டறியப்பட்டால், அவரினால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மறைத்திருந்ததாக தெரியவந்தால், அவர் மேலும் பதவி உயர்வு வழங்க கருத்திற் கொள்ளப்பட மாட்டார் என்பதோடு, இந்தப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு நியமனமும் இரத்து செய்யப்படுவதற்கோ அல்லது அரசுப் பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கோ அவர் கட்டுப்பட்டவராவார்.

**11. பரீட்சை நடைமுறை :–**

எழுத்துப் பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. அலுவலக முகாமைத்துவம் | 2 மணித்தியாலம் | 100 |
| 2. அலுவலக முறைமை | 2 மணித்தியாலம் | 100 |
| 3. தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 |
| 4. அரச நிதி முகாமைத்துவம் | 2 மணித்தியாலம் | 100 |
| 5. பொது வினாப் பத்திரம் | 1 1/2 மணித்தியாலம் | 100 |

12. பாடத் திட்டம் :-

பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் தொடர்பிலான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

I. **அலுவலக முகாமைத்துவம் (காலம் 02 மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

ஒழுங்குக் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள், பணிப் பகுப்பாய்வு, பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாடல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்.

II. **அலுவலக முறைமை (காலம் 02மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

அலுவலக முறைமைகள் தொடர்பான அடிப்படைகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை நிர்வாகித்தல் மற்றும் மாதிரிப் படிவங்களை திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, வேலைக் கட்டங்களை தயாரித்தல்.

III. **தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள் ( காலம் 02 மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள், அரச உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகள், அரச ஊழியர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு மற்றும் சேவையை முடிவுறுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் அதிகாரங்களை வழங்குதல், அரச ஊழியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை, நலன்புரி, அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகும் சிறப்புரிமைகள், நிறுவனத்தின் பணிகள் தொடர்பானஅரச மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்படும் விதிமுறைகள், நடைமுறை ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை தொடர்பான பொதுவான புரிதல் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

IV. **அரச நிதி முகாமைத்துவம் (காலம் 02 மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் கணக்குகள் வழங்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவும், மீளப் பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, கட்டுநிதி மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், விலைமனுக் கோரல் செயற்பாடுகள், பொருட் தொகை கணக்கெடுப்பு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள், அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுவான அறிவு போன்றவற்றை உள்ளடக்கிய வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

V. **பொது வினாப் பத்திரம் (காலம் 1½ மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

அரச நிர்வாகத்தின் இயல்புகள், அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரசாங்க கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்), பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக கலாசாரம், தொழில்சார் ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதீக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும் ஊழியர் குழாத்தினரின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து செயற்பாடுகள் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவை பெறுநர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்.

14. நியமனத்திற்காக தேர்ந்தெடுத்தல்: :–

மேற்படி பரீட்சையில் சித்தியெய்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு, ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதிப் பட்டியலின் ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சைச் சபைக்கு முன்னிலைக்கு அழைக்கப்படுவார்கள். அந்நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவுகின்ற வடமேல் மாகாணத்தில் எந்தவொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள அலுவலகத்தில் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். இணைக்கப்படுகின்ற அலுவலகத்தில் நியமனத்தைப் பொறுப்பேற்க மறுத்தால், அவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டு, அடுத்துள்ள தகுதி ஒழுங்கிற்கு ஏற்ப அழைக்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

15. வடமேல் மாகாண சபை அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கு, 2015.01.16 ஆந் திகதிய வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதனகத்து மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், கட்டுப்பட்டு, இப்பரீட்சையை நடாத்துவதற்கும், அதிஉயர் தரத்திற்கு பதவி உயர்த்தலும் மேற்கொள்ளப்படும்.

16. எந்தவொரு வெற்றிட எண்ணிக்கையையும் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கும், இங்குள்ள விதிமுறைகளில் வழங்கப்படாத விடயங்களில் முடிவுகளை எடுப்பதற்கும் வடமேல் மாகாண சபைகள் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

**என்.எம்.ஜே. பிரணாந்து**
செயலாளர்
வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு.

2025 அக்டோபர் மாதம் 03 ஆந் திகதியில்.
மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருணாகல்.